[2017 மார்ச் 23

2. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த அலுவல் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம். எதிர்க்கட்சித் தலைவர் உட்பட திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கையொப்பமிட்டு 21–2–2017 ஆம் நாளைய கடிதத்தில் "பேரவைத் தலைவர்மீது நம்பிக்கை இல்லை" என்னும் தீர்மானத்தைக் கொண்டு வருகிறோம் எனக் கொடுத்தார்கள். பேரவைத் தலைவர்மீது நம்பிக்கை இல்லை என்னும் தீர்மானத்தைக் கொண்டுவர பேரவை விதிகளில் வழிவகையில்லை என்றாலும்கூட, 16–3–2017 அன்று நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னரே முதல் அலுவலாக இதனை எடுத்துக்கொள்ள நான் யோசித்துக் கொண்டிருந்தேன்.

முற்பகல் 11–10

இந்த நிலையிலே 9–3–2017 அன்று "பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானத்தை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 68–ன்கீழ் கொண்டு வருகிறோம்" எனக் குறிப்பிட்டு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தார்கள். விதிகளிலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அந்தக் கடிதம் அளிக்கப்பட்டு, நேற்றோடு 14 நாட்கள் முடிந்த பின்னர், இன்றைக்கு அந்த அலுவல் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இந்த அவையின் பேரவைத் தலைவராக, இரண்டாவது முறையாக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் தலைவராக முதல் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியது குறித்து பதினான்காவது சட்டமன்றப் பேரவையின் இறுதிக் கூட்டத்தொடரின் நிறைவு நாளன்று, அதாவது, 20–2–2016 அன்று, "இந்தச் சட்டமன்றத்தில் நடுநிலை தவறாது பணியாற்றிய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்களுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என எங்கள் குடும்ப தெய்வம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) பாராட்டியதை எனக்குக் கிடைத்த மிகப் பெரிய சான்றிதழாக, என் வாழ்நாளிலே எனக்குக் கிடைத்த நற்பெயராக நான் கருதி பூரிப்படைந்த நாள் அந்த நாள். இந்தப் பதவியிலே நான்

2017 மார்ச் 23] *[பேரவைத் தலைவர்]*

மகிழ்ச்சியின் உச்சத்தைத் தொட்ட நாள், அந்த நாள். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் இரண்டாவது முறையாக பேரவைத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்ட பின்னர், அதாவது, 3–6–2016 அன்று, என்னை வாழ்த்திப் பேசிய மாண்புமிகு அம்மா அவர்கள், தொடர்ச்சியாக இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைக் குறிப்பிட்டு "எனக்கு இதிலே இரட்டிப்பு மகிழ்ச்சி" என மகிழ்ச்சியோடு குறிப்பிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மகிழ்ச்சியடையச் செய்த அந்தத் தருணம்தான் எனக்கும் மகிழ்ச்சியான தருணமாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

Central Legislative Assembly-ன் சபாநாயகராக இருந்த திரு. விட்டல்பாய் பட்டேல் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு "தாங்கள் பேரவைத் தலைவராக இருந்த ஆண்டுகளின் அவை நடவடிக்கைக் குறிப்புகளைப் படித்துப் பார்த்தாலே எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எந்த அளவிற்குப் பேச வாய்ப்பு அளித்துள்ளீர்கள், எந்த அளவிற்குக் கனிவோடும், கண்டிப்போடும் நடந்து கொண்டீர்கள், எந்த அளவிற்கு அவையின் மாண்பினையும் உறுப்பினர்களின் பாதுகாப்பினையும் நிலைநாட்டினீர்கள் என்பதை எளிதில் புரிந்துகொள்ளலாம்" என்றும், "மொத்தத்தில் நடுவுநிலைமை என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு தாங்கள் கடந்த காலங்களில் செயல்பட்டு வந்தீர்கள்" என்றும், (மேசையைத் தட்டும் ஒலி) "இனி வருங்காலங்களிலும் தங்கள் பணி தராசு முள்போல, எந்தப் பக்கமும் சாயாமல் நடுநிலையோடு இருக்கும் என்பதிலே ஐயமில்லை" என்றும் அன்றைக்குக் குறிப்பிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பதவியிலே நான் ஆற்றிய பணிக்கு இந்தச் சான்று ஒன்றே எனக்குக் கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரமாகக் கருதி நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"பின்தங்கிய கிராமத்தில் ஏழை விவசாயக் குடும்பத்திலே பிறந்து, முதுகலைப் பட்டம் படித்த தாங்கள் இந்த மாமன்றத்திற்கு ஆறாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள்" என்றும் "அன்பிற்கும் எளிமைக்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் பாங்கினைத் தாங்கள் இயற்கையாகவே பெற்றிருக்கிறீர்கள்" என்றும், "அமைச்சராகவும், துணை சபாநாயகராகவும், சபாநாயகராகவும் திறம்படப்

பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்

[பேரவைத் தலைவர்] [2017 மார்ச் 23

பணியாற்றிய அனுபவம் தங்களுக்கு ஏற்கெனவே உண்டு. இந்தப் பணி உங்களுக்குப் புதிய பணியல்ல. எனவே, இந்தக் கடினமான பணியை நீங்கள் செவ்வனே ஆற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு" என்றும், (மேசையைத் தட்டும் ஒலி) "இந்தப் பதவி உங்களை வந்தடைந்ததற்குக் காரணம், உங்களுடைய திறமை, உங்களுடைய ஆற்றல், உங்களுடைய அனுபவம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்" எனவும் மாண்புமிகு அம்மா அவர்கள் குறிப்பிட்ட அந்தத் தருணம் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பதவியிலே நான் மகிழ்ச்சியின் உச்சத்தைத் தொட்ட தருணமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இரண்டு தருணங்களும்தான் இந்தப் பதவியிலே மகிழ்ச்சியின் உச்சத்தை நான் தொட்ட தருணங்கள்.

முற்பகல் 11–15

24–1–2017 அன்று மாண்புமிகு அம்மா அவர்களின் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம் இந்தப் பேரவையிலே நிறைவேற்றப்படுகையில், நான் தலைமை ஏற்ற தருணம், இந்தப் பதவியிலே எனக்குக் கிடைத்த மிகவும் வருத்தப்படக்கூடிய தருணமாக நான் கருதினேன். அன்றைக்கு நான் உரையாற்றுகையில் "மாண்புமிகு அம்மா அவர்களால் எனக்கு வழங்கப்பட்ட இந்தப் பதவி குறித்து எத்தனையோ நேரங்களில் நான் பெருமைப்பட்டுள்ளேன். இன்றையதினம் துரதிருஷ்டவசமாக இந்த இரங்கல் தீர்மானத்தின்மீது உரையாற்றும் இந்தத் தருணத்தினை நினைத்து மிகுந்த வேதனைப்படுகிறேன், துன்பப்படுகிறேன். என்னுடைய வாழ்நாளில் எனக்குக் கிடைத்த துர்பாக்கியமாகவே இதைக் கருதுகிறேன்" என்று குறிப்பிட்டேன். இந்தத் தருணம் வருத்தத்தின் உச்சத்தைத் தொட்ட தருணம் ஆகும்.

18–2–2017 அன்று இப்பேரவையில் நடைபெற்ற நிகழ்வுகள். நான் அதை மீண்டும் நினைத்துக்கூடப் பார்க்க விரும்பவில்லை. அதைப்பற்றிப் பேசினால் நான் உடைந்துவிடுவேன். இந்தத் தருணம் நான் வருத்தத்தின் உச்சத்தைத் தொட்ட தருணம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பதவியிலே மகிழ்ச்சியின் உச்சத்தையும், வருத்தத்தின் மொத்தத்தையும் நான் தொட்டுவிட்டேன். இனி எனக்கு அனுபவிக்க சொச்சம் எதுவும் இல்லை. இந்தப் பதவியிலே நான் தாமரை இலைத் தண்ணீரைப் போலத்தான், பற்றற்றுச் செயல்படுகிறேன். இந்தப் பேரவை என்ன தீர்மானித்தாலும் அது என்னைப் பாதிக்காது என்பதை மட்டும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். பேரவை எவ்வாறு

தீர்மானித்தாலும் அது எனக்கு மகிழ்ச்சியையோ அல்லது வருத்தத்தையோ ஏற்படுத்தாது என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது பேரவையின் முன்னுள்ள அலுவல், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் ஆகும். பேரவை விதி 70(1)–ன்படி, இத்தீர்மானத்தை நான் பேரவைக்குப் படிக்க வேண்டும். தீர்மானம் கீழ்க்கண்டவாறு உள்ளது:

"மாண்புமிகு திரு. ப. தனபால் அவர்களைப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது."

இந்தத் தீர்மானத்திற்கான அறிவிப்பினை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்துள்ளார்கள். பேரவை விதி 70(1)–ன்படி, இத்தீர்மானத்தை முன்மொழிய இப்பேரவை இசைவு அளிக்க வேண்டும். எனவே, பேரவை இசைவு அளிக்கிறதா, இல்லையா என்பதை அறிய இத்தீர்மானத்தைக் கொண்டுவர இசைவளிக்கும் உறுப்பினர்களை அவரவர்கள் இடங்களிலே எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உறுப்பினர் ஆகியோர் எழுந்து நின்றனர்.)

உட்காரலாம், உட்காருங்கள். 35–க்குக் குறையாத உறுப்பினர்கள் எழுந்து நின்று இசைவு அளித்திருப்பதால், இத்தீர்மானத்திற்குப் பேரவையின் அனுமதி கிடைத்துள்ளது என அறிவிக்கிறேன். பேரவை விதி 70(2)–ன்படி இத்தனித் தீர்மானத்தின் விவாதம் இன்றைக்கே, உடனடியாக நடைபெறலாம். இதுகுறித்து ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்போதே இந்தத் தீர்மானம் பேரவையிலே முன்மொழியப்பட்டு விவாதிக்கப்படலாம். பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் முன்மொழியப்பட்டு, விவாதம் உடனே எடுத்துக்கொள்ள இருப்பதால், சபையின் அலுவல்களை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தனது இருக்கையிலிருந்து இறங்கி தனது அறைக்குச் சென்றார்.)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

[2017 மார்ச் 23

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போது பேரவையின் முன்னுள்ள அலுவலான மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் முன்மொழியப்பட்டு, விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழியலாம்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 68-ன்கீழ் அடியிற்கண்ட தீர்மானத்தை அவையில் கொண்டு வருவதற்கு அனுமதி கோருகிறேன்:

"மாண்புமிகு திரு. ப. தனபால் அவர்களைப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று இப்பேரவை தீர்மானிக்கிறது."

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இத்தீர்மானத்தை வழிமொழிபவர்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் தொடங்குகிறது. முதலில் தீர்மானத்தைக் கொடுத்துள்ள மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

முற்பகல் 11–20

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டமன்ற வரலாறு நூற்றாண்டு விழாவினை இன்னும் நான்கு வருடத்தில் காணப்போகிறது. Madras Legislative Council 1921-ல் உருவாக்கப்பட்டிருக்கிறது. பேரவைத் தலைவர் கம்பீரமாக அமர்ந்திருக்கக்கூடிய இந்த நாற்காலிக்கும் அதே வருடத்தில்தான் நூற்றாண்டு விழா. இந்த நாற்காலியை தமிழகத்திற்கு Governor Lord Willington அளித்ததற்கான நூற்றாண்டும் அப்போது நிறைவுபெறுகிறது. இந்திய அரசியல் சட்டத்தின்கீழ் முதன்முதலில் Madras Legislature உருவானது 1952 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1 ஆம் தேதி. இப்படிப்பட்ட சிறப்புமிக்க இந்த மார்ச் மாதத்தில்

2017 மார்ச் 23] [திரு. மு.க. ஸ்டாலின்]

சிறப்புக்குரிய இந்தச் சட்டமன்றத்தில் பேரவைத் தலைவராக அமர்ந்திருக்கிறார். இந்த அவையினுடைய எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் நானும், அவை முன்னவர் என்ற முறையில் அன்றைக்கு அமர்ந்திருந்த மாண்புமிகு திரு. ஓ.பி.எஸ். அவர்களும் பேரவைத் தலைவரை அழைத்துச் சென்று இந்த இருக்கையிலே அமர வைத்தோம். 6–2–1921 அன்று இந்த கம்பீரம்மிக்க நாற்காலியை வழங்கிய Lord Willington அவர்கள் "இந்த நாற்காலியில் அமருபவர் அனைவரும் சென்னை மாகாணக் கவுன்சிலின் உயர்ந்த கண்ணியத்தையும், பெருமையையும் நிலைநாட்டிடச் செய்வார்கள்" என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, "அவர்கள் எப்போதும் சிறந்த முடிவுகள், சிறந்த தீர்ப்புகள், சிறந்த யுக்திகள்மூலம் இந்த அவையை நடத்திச் செல்வார்கள் என்று நம்புகிறேன்" என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட எண்ணங்களோடும், உயர்ந்த சிந்தனைகளோடும், நன்கொடையாக அளிக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த நாற்காலியை அன்று ராஜகோபால ஆச்சாரியார் அவர்கள் பெற்றுக்கொண்டார் என்பது இந்த அவையினுடைய வரலாறு. அப்பொழுதெல்லாம் Speaker என்று சொல்வதற்குப் பதில் President என்றுதான் பேரவைத் தலைவரை அழைத்திருக்கிறார்கள். அப்படி ஒரு President பதவி முதன்முதலில் இந்திய அரசு சட்டம், 1919–ன்கீழ் மத்திய சட்டப் பேரவையில்–Central Legislative Assembly–ல் உருவாக்கப்பட்டிருக்கிறது. Sir Fredric Quik முதன் முதலில் President ஆக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர்தான் நியமிக்கப்பட்ட பேரவைத் தலைவர். இவருக்குப் பிறகு அனைத்துப் பேரவைத் தலைவர்களுமே தேர்வு செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

Vithalbhai J. Patel அவர்கள் முதல் பேரவைத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டவுடன் அவர் ஆற்றிய உரை மிகமிக முக்கியமானதாக வரலாற்றிலே பதிவாகியிருக்கிறது. ஸ்வராஜ் கட்சியைச் சேர்ந்த அவர் பேரவைத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டவுடன் "கட்சிக்கும், எனக்கும் இருந்த உறவைத் துண்டித்துக்கொள்கிறேன். இன்றிலிருந்து நான் எந்தக் கட்சியையும் சார்ந்தவன் அல்ல. அதற்கு மாறாக அனைத்துக் கட்சிகளையும் சார்ந்தவன்" என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆங்கிலத்தில் அதைக் கூறுவது என்று சொன்னால், "I cease to be a party man. I belong to no party. I belong to all parties" என்று குறிப்பிட்டிருக்கிறார். அதனால்தான் அவருடைய சிலையைத் திறந்து வைத்த இந்தியாவினுடைய முதல் பிரதமராக

பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2017 மார்ச் 23

இருந்த ஜவஹர்லால் நேரு அவர்கள் "பேரவைத் தலைவர் என்பவர், அவை, அவையினுடைய கண்ணியம், அவையினுடைய சுதந்திரம் ஆகியவற்றினுடைய பிரதிநிதியாகத் திகழ்கிறார். பேரவை என்பது சுதந்திரம், கருத்துரிமையைப் பிரதிபலிக்கிற இடமாகத் திகழ்கிறது" என்று அழகாகக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். அப்படிப்பட்ட உயர்ந்த இலக்கணத்திற்குரியது பேரவைத் தலைவருடைய பதவி. இதற்கு முன்னால் 17 பேர் அமர்ந்து இந்தச் சட்டப் பேரவையை நடத்தியிருக்கிறார்கள். சுதந்திர இந்தியாவில் முதல் பேரவைத் தலைவராக திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்கள்; அதற்குப் பிறகு திரு. யு. கிருஷ்ணா ராவ் அவர்களும், அடுத்தடுத்து வந்த பேரவைத் தலைவர்களும் இந்த மன்றத்தை நடத்தியிருக்கிறார்கள். திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை போன்றவர்கள் இருந்து பேரவையை நடத்தியதுபோல் பலர் இந்தப் பேரவையை நடத்திக் காட்டியிருக்கிறார்கள்.

குறிப்பாக, முத்துதேவன்பட்டி விவகாரத்தில் ஆளுங்கட்சி அமைச்சருக்கு எதிராகவே தீர்ப்பளித்த திரு. க. இராசாராம் போன்ற சுதந்திரம் மிக்க, துணிச்சல் மிக்க பேரவைத் தலைவர் இருந்த பேரவை இது. பேரறிஞர் அண்ணா, "தமிழ்நாடு சட்டமன்றம்" என்று உருவாக்கி இந்தச் சட்டமன்றம் பொன் விழா கண்ட ஆண்டின்போது தாங்கள் பேரவைத் தலைவராக வீற்றிருக்கிறீர்கள். இவ்வளவு பெருமைமிக்க இந்தச் சட்டமன்றத்தில் இன்றையதினத்தை நான் மனமுவந்து வரவேற்கவில்லை. நாங்கள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா வழி வந்தவர்கள். தலைவர் கலைஞர் அவர்களிடம் சட்டமன்ற மரபுகளைப் பற்றியும் கற்றிருக்கக்கூடியவர்கள். விவாதங்களில் விருப்பு, வெறுப்பின்றி நாகரிகமான விவாதங்களை எடுத்து வைக்கக்கூடிய அனுபவத்தையும் ஓரளவுக்குப் பெற்றிருக்கக்கூடியவர்கள். புகழ்பெற்ற சட்டமன்றம், புகழ்பெற்ற பேரவைத் தலைவர்கள் இருந்த இடம். இந்தப் பேரவையில் இப்படி ஒரு தீர்மானத்தின்மீது பேச வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டதை எண்ணி நான் உள்ளபடியே வேதனைப்படுகிறேன். 15–வது பேரவையின் தலைவர் தேர்வு நடந்து முடிந்தவுடன், பேரவைத் தலைவர் அவர்களை இருக்கையிலே அமர வைத்துவிட்டு நான் குறிப்பிட்டுச் சொன்னேன். "தாங்கள் வயலின் போல் பணியாற்ற வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை நிச்சயமாக நாங்கள் தருவோம்" என்று அன்றைக்கு நான் உறுதிமொழி கொடுத்தேன். அந்த உறுதிமொழியிலிருந்து

2017 மார்ச் 23] [திரு. மு.க. ஸ்டாலின்]

இன்றைக்கும் நான் பின்வாங்கவில்லை. அதேபோல எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களும் அதே உணர்வோடுதான் இருக்கிறார்கள். ஆனால், எங்களுடைய ஆக்கபூர்வமான ஒத்துழைப்பைப் பயன்படுத்திக்கொள்ள பேரவைத் தலைவர் தவறிவிட்டார் என்றே நான் கருதுகிறேன். அப்படி நான் நினைப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

முற்பகல் 11–25

சட்டப் பேரவை விதி 90, அவையில் விவாதிக்கப்படும் பொருள் குறித்து மட்டுமே கருத்துகளை பேச வேண்டும் என்று கூறுகிறது. விதி 92, உட்பிரிவு 2-ல், எந்த ஓர் உறுப்பினர்மீதும் தனிப்பட்ட குற்றச்சாட்டுகளைக் கூறக் கூடாது என்று கூறப்பட்டுள்ளது. விதி 92, உட்பிரிவு 8, அவதூறுகள் பேசக்கூடாது என்று தெளிவாகக் கூறுகிறது. விதி 99(3)-ன்கீழ், நம்பிக்கை வாக்கெடுப்பை டிவிஷன் முறையில் நடத்த பேரவைத் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. விதி 99(4)-ன்கீழ், வாக்கெடுப்பு குறித்த நடைமுறைகளை ஏற்படுத்தவும் பேரவைத் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. விதி 118-ன்கீழ், அவதூறாகப் பேசும் ஓர் உறுப்பினரின் பேச்சை நிறுத்துவதற்கு பேரவைத் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. அப்படி அவதூறாகப் பேசுவதை விதி 119-ன்கீழ் உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி பேரவைத் தலைவரால் நீக்க முடியும். இவ்வளவு அதிகாரங்கள் இருந்தும் மரபுகளைக் காப்பாற்ற பேரவைத் தலைவர் தவறிவிட்டார் என்பதை எடுத்துக்காட்டவே இதை நான் கூறுகிறேன். இப்படியெல்லாம் பேரவை விதிகள் இருந்தும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள்மீது அவதூறுகள் பேசப்படுவதை பேரவைத் தலைவர் அனுமதித்தார். அவதூறுகளை நீக்க தனக்குள்ள அதிகாரத்தை அவர் பயன்படுத்த மறுத்தார். நம்பிக்கை வாக்கெடுப்பை நியாயமாக நடத்துவதற்கு தன் அதிகாரத்தைப் பயன்படுத்த முன்வரவேயில்லை. சட்டமன்றத்தில் விவாதிக்கப்படும் பொருளுக்கு, வெளியே சென்று தங்கள் இஷ்டப்படி அவதூறு கருத்துகளைப் பேசுவதற்கு ஆளுங்கட்சி உறுப்பினருக்குப் பேரவைத் தலைவர் வாய்ப்பளித்தார். இதற்கு ஆதாரங்கள் பலவற்றை என்னால் பட்டியலிட முடியும். இந்த 15-வது சட்டப் பேரவையில் நடைபெற்ற விஷயங்களை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

20–6–2016 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜன் செல்லப்பா அவர்களின் அவதூறு பேச்சை அனுமதித்திருக்கிறார்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2017 மார்ச் 23

அதை நீக்குவதற்கு நாங்கள் எவ்வளவோ போராடினோம். அதை நீக்க மறுத்தார் பேரவைத் தலைவர்.

25–7–2016 அன்று தலைவர் கலைஞருடைய பெயரைக் குறிப்பிட்டார் மாண்புமிகு உறுப்பினர் திரு. நரசிம்மன் அவர்கள். அவர் பேசியதை நீக்க மறுத்துவிட்டார் பேரவைத் தலைவர். ஆனால், மறைந்த முன்னாள் முதலமைச்சர் பெயரை நாங்கள் குறிப்பிட்டபொழுது அதை நீக்கினார்.

27–7–2016 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள் பேசிய அவதூறு பேச்சுகளை நீக்கிட பேரவைத் தலைவர் மறுத்தார்.

29–7–2016 அன்று பேரவைத் தலைவரே 'எதிர்கட்சிக்குக் கண்டனம் தெரிவிக்கிறேன்' என்று இந்த அவையிலே உரை நிகழ்த்தி, பேரவையினுடைய கண்ணியத்தையும் குறைத்தார்.

3–8–2016 அன்று '89 வயக்காட்டுப் பொம்மைகள்' என்று திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களைக் கூறியபொழுது அதை நீக்க மறுத்தார் பேரவைத் தலைவர். ஆனால், ** என்று கூறிய வார்த்தையை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கினார்.

17–8–2016 அன்று ஆளுங்கட்சி உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள், 'நமக்கு நாமே, நமக்கு நாமே என்று கூக்குரலிட்டவர்கள் எல்லாம்' என்று தேவையில்லாத ஒரு பேச்சை இங்கே பதிவு செய்தார். நாங்கள் ஆட்சேபித்தோம். நீக்க வேண்டுமென்று வலியுறுத்தினோம். ஆனால், பேரவைத் தலைவர் அதை மறுத்துவிட்டார். நான் பேசியதை மட்டும் நீக்கினார். அதுமட்டுமல்ல, அன்று அவைக்கு வந்திருந்த திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை ஒரு வாரம் நீக்கி வைத்தார்கள். இதுபோன்ற நிகழ்வுகள் பல உண்டு. அதற்கு பேரவைத்தலைவருடைய ஒருதலைபட்சமான நடவடிக்கைகள்தான் காரணம். அதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை. அன்று, காவல் துறை மானியத்திலே பேசவிடக்கூடாது என்பதற்காகவே திட்டமிட்டு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் 8 பேர் தவிர, மற்ற அனைவரையும் என்னை உட்பட ஒரு வார காலம் தற்காலிக நீக்கம் செய்தார்கள். அந்த நீக்கத்தை இரத்து செய்யக் கோரி எங்களுடைய 8 சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2017 மார்ச் 23] [திரு. மு.க. ஸ்டாலின்]

வைத்தபொழுது, 'என் தீர்ப்பை நான் திரும்பப் பெற மாட்டேன். வேண்டுமென்றால் நீங்களும் வெளியிலே போங்கள்' என்று கூறினார்.

19–8–2016 அன்று எதிர்கட்சித் தலைவர் அவைக்கு வருவதற்கு நுழைவாயில் எண் *4*–ஐப் பூட்டி வைத்தார்கள். பேரவைத் தலைவர் அதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

முற்பகல் *11–30*

2–9–2016 அன்று நகராட்சி மற்றும் பேரூராட்சி சட்டமுன்வடிவு இந்த அவையிலே கொண்டு வரப்பட்டது. அவசர அவசரமாகக் கொண்டுவரப்பட்ட அதன்மீது division கேட்டோம். அதையும் நிராகரித்தார் பேரவைத் தலைவர் அவர்கள். அதே இனத்திலே தி.மு.க. உறுப்பினர்களைப் பார்த்து, 'அருகதை', 'தகுதி', 'என்ன யோக்கியதை இருக்கிறது?' என்றெல்லாம் பதிவு செய்யப்பட்ட வார்த்தைகளை நீக்குவதற்கு பேரவைத் தலைவர் திட்டவட்டமாக மறுத்திருக்கிறார். அதனால், நாங்கள் வெளிநடப்புச் செய்து எங்களுடைய எதிர்ப்பை வெளிக்காட்டினோம்.

1–2–2017 அன்று மாண்புமிகு அமைச்சர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள், 'விஷத்தைக் கக்குகிறார்கள்' என்று இங்கே பதிவு செய்தார். 'சட்டமன்றம் செத்துவிட்டது' என்றே பதிவுகள் இந்தச் சட்டமன்றப் பதிவேட்டில் இருக்கிறபோது, ** என்று கூறிய வார்த்தையை நீக்கினார். ஆனால், திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள் பேசிய வார்த்தையை அவைக் குறிப்பிலே இடம் பெறச் செய்தார்.

எல்லாவற்றுக்கும் மேலாக *18–2–2017* அன்று நடைபெற்ற நம்பிக்கைக் கோரும் வாக்கெடுப்பில் பேரவைத் தலைவர் அவர்கள் நடந்துகொண்ட விதம், இந்த நிலையில் ரகசிய வாக்கெடுப்பு நடத்திட வேண்டுமென்று நாங்கள் கோரிக்கை வைத்தோம். பொத்தாம் பொதுவாக வைத்த கோரிக்கை அல்ல. முன்னுதாரணங்கள் பல உண்டு. உதாரணமாக நான் சொல்ல வேண்டுமென்று சொன்னால், உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் உத்தரப் பிரதேசத்திலே ரகசிய வாக்கெடுப்பு *28–2–1998* அன்று நடைபெற்றிருக்கிறது. அதேபோல, ஜார்க்கண்ட் மாநிலத்திலே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2017 மார்ச் 23

11–3–2005 அன்று உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் நடைபெற்றிருக்கிறது. உத்தரகாண்ட் மாநிலத்திலே 10–5–2016 அன்று இப்படி ஒரு வாக்கெடுப்பு நடைபெற்றிருக்கிறது. ஆக, உச்ச நீதிமன்றமே வழிகாட்டியிருக்கக்கூடிய ஒரு வாக்கெடுப்பை நடத்துவதற்கு பேரவைத் தலைவருக்கு எந்தத் தடையும் இல்லை. ஆகவே, ரகசிய வாக்கெடுப்பு என்ற எங்களுடைய கோரிக்கை என்பது நியாயமானது என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். மாநிலத்தில் வாக்களித்த மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில்தான் தி.மு. கழகத்தின் சார்பில் ரகசிய வாக்கெடுப்பு நடத்திட நாங்கள் அன்றைக்குக் கோரிக்கை வைத்தோம். அந்தக் கோரிக்கையில் உள்ள நியாயத்தை பேரவைத் தலைவர் உணர மறுத்தார்.

தி.மு.க. உறுப்பினர்கள் யாரும் பேரவைத் தலைவரை தரக்குறைவாகப் பேசவில்லை; விமர்சிக்கவும் இல்லை. பேரவைத் தலைவர் தன் சட்டை கிழிந்திருந்ததை தனது அறைக்கு அழைத்து எங்களிடத்திலேகூட காட்டினார்கள். "எங்களுடைய உறுப்பினர்கள் அப்படிச் செய்திருக்க மாட்டார்கள். இருந்தாலும் நான் வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன்" என நான் அவரிடத்திலே தெளிவாக எடுத்துச் சொன்னேன். ஆனால், அறையில் ஏற்றுக்கொண்ட அவர், அவைக்கு வந்து இந்தக் குற்றச்சாட்டை தி.மு.க. உறுப்பினர்கள்மீது உள்நோக்கத்தோடு பதிவு செய்தார். அதுமட்டுமல்ல, அன்றையதினம் இரு முறை அவையை ஒத்தி வைத்து, மீண்டும் 3–00 மணிக்கு அவை கூடும் முன்பு 100–க்கும் மேற்பட்ட போலீசாரை, ஏன், ஐ.பி.எஸ். அதிகாரிகளைக்கூட சட்டமன்ற சார்ஜன்ட் சீருடையிலே வரவழைத்து தி.மு.க. உறுப்பினர்களை இங்கிருந்து குண்டுக்கட்டாக, அராஜகமாகத் தாக்கி, வெளியிலே கொண்டுபோய் போட்டார்கள். பல உறுப்பினர்களுக்குக் காயங்கள்கூட ஏற்பட்டன. தூக்கி எறியப்பட்ட நாங்கள் ராஜ்பவனுக்குச் சென்று ஆளுநரிடத்திலே முறையிட்டோம். அதன் பிறகு மெரினாவிலே போராட்டம் நடத்தினோம். ஏன், டெல்லிக்குச் சென்று குடியரசுத் தலைவரிடம்கூட நாங்கள் முறையிட்டிருக்கிறோம். நாங்கள் வெளியேற்றப்பட்ட பிறகு காங்கிரஸ், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிகளினுடைய உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள். ஆளும் கட்சியினரை மட்டுமே வைத்து வாக்கெடுப்பு நடத்தி வெற்றி பெற்றதாக அறிவித்தார் பேரவைத் தலைவர் அவர்கள். முற்றிலும் விரோதமாக, அவை விதிகளுக்கு முரணாக, சட்டமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாக வாக்களிக்கிறார்களா என்பதை உறுதி

2017 மார்ச் 23] [திரு. மு.க. ஸ்டாலின்]

செய்யாமல் பேரவைத் தலைவர் உள் நோக்கத்தோடு நம்பிக்கைக் கோரும் தீர்மானத்தின் வாக்கெடுப்பில் நடந்து கொண்டார். அரசின் மீதான நம்பிக்கைத் தீர்மானத்தில் ஜனநாயக மரபுகளை மீறிய காரணத்தால் இன்றைக்கு பேரவைத் தலைவர்மீது அரசியல் சட்டப் பிரிவு 179 (உ)-ன்படியும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 68-ன்கீழும் இந்த நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வந்து நான் உரையாற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பதை இந்த அவையிலே நான் பதிவு செய்கிறேன்.

மீண்டும் நான் இங்கே பதிவு செய்ய விரும்புவது, பேரவைத் தலைவர்மீது தனிப்பட்ட முறையில் எனக்கு விருப்போ, பகையோ இடையாது. பேரவைத் தலைவர் அவர்களுக்கே தெரியும். அவரைப் பொறுத்தவரையில் திராவிட இயக்கத்தால் பயன் பெற்றவர் அவர். அப்படிப்பட்ட இயக்கத்தில் வந்த எங்களைப் பார்த்து, தாழ்த்தப்பட்டவன் என்பதால் என்னை இப்படி துன்புறுத்துகிறார்களா என்று அரசியல் நோக்கத்தோடு கூறியதை ஏற்கவோ, தாங்கிக்கொள்ளவோ எங்களால் முடியவில்லை.

இறுதியாக, ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புவது, பாராளுமன்ற சபாநாயகராக இருந்த அனந்தசயனம் ஐயங்கார் அவர்கள், 'ஜனநாயகத்தில் மக்களே எஜமானர்கள்' என்று சொன்னார்கள். அந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளைக் கொண்ட பேரவைக்குப் பேரவைத் தலைவர்தான் எஜமானர் என்பதில் நிச்சயமாக சந்தேகம் இல்லை. பிரிட்டன் நாடாளுமன்ற மக்களவை முன்னாள் தலைவர் William Lenthall அவர்கள், 'பேரவை எனக்கு இடும் கட்டளையின்படி இன்றி இவ்விடத்தில் நான் பார்ப்பதற்கோ, பேசுவதற்கோ எனக்கு உரிமை இல்லை' என்று கூறியதை நான் இந்த அவையிலே நினைவுபடுத்துகிறேன். பேரவைதான் உங்களுக்குக் கட்டளை இடவேண்டுமேதவிர, ஆளுங்கட்சியினர் உங்களுக்குக் கட்டளையிடக் கூடாது.

முற்பகல் 11-35

அவை நடவடிக்கைகளை நேரடியாக ஒளிபரப்ப வேண்டுமென்ற அனைவரின் கோரிக்கையை ஏற்க மறுத்து வருவது, பேரவை நடவடிக்கைகளின் வெளிப்படைத் தன்மைக்கு பேரவைத் தலைவர் தயாராக இல்லை என்பதை வெளிப்படுத்துகிறது. பொதுமக்களுக்கு

[திரு. மு.க. ஸ்டாலின்] [2017 மார்ச் 23

அவை நடவடிக்கைகளைப் படம்பிடித்துக் காட்டாமல் ஆளுங்கட்சிக்கு சாதகமாக நடவடிக்கைக் குறிப்புகளை editசெய்து ஒளிபரப்புவது போன்ற விஷயங்களில் ஈடுபட்டு அவையின் கண்ணியத்தைக் காப்பாற்ற பேரவைத் தலைவர் தவறிவிட்டார். மக்களின் எண்ண ஓட்டத்திற்கு ஏற்ற நம்பிக்கை வாக்கெடுப்பை நடத்துவதற்குப் பிடிவாதமாக மறுத்து, தி.மு.க. உறுப்பினர்கள்மீது அடக்குமுறையை ஏவிவிட்டு, அனைவரையும் தூக்கிச் செல்ல வைத்தார்.

ஆகவே, பேரவைத் தலைவர் பதவியிலே பாரபட்சமாக, ஒருதலைபட்சமாக தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளைப் புறந்தள்ளி நடந்துகொண்டதால், இந்தப் பதவியில் தங்களை நீடிக்க அனுமதிப்பது சட்டப் பேரவையின் ஜனநாயகத்திற்கும், சட்டமன்ற உறுப்பினர்களின் பேச்சுரிமைக்கும் குந்தகம் விளைவிக்கக்கூடிய வகையில் அமைந்திருக்கிறது என்ற குற்றத்தை சுமத்தி, பேரவைத் தலைவரை பதவியிலிருந்து நீக்கக்கூடிய தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

எனவே, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை டிவிஷனுக்கு விடுமாறு கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர்மீது நம்பிக்கையில்லா தீர்மானத்தில் பேசுகிறபொழுது, அதைப்பற்றி எண்ணிப் பார்க்கும்போதே உண்மையிலேயே வேதனைப்படுகிறேன். சபாநாயகர் அவர்களை ஆசனத்தில் அமர்த்தி, அவர்களை வாழ்த்திப் பேசும்போது 'சபாநாயகர் அவர்கள் ஒரு தராசைப் போன்று சமமான நிலையிலேயிருந்து செயல்படவேண்டும்' என்று நான் அவர்களைக் கேட்டுக்கொண்டேன். ஆனால் சில மாறுபட்ட கருத்துகள் இப்பொழுது நமது சபையிலே ஏற்பட்டிருக்கின்றன. அவற்றைச் சுட்டிக்காட்ட வேண்டியது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

சபை விதிகளின்படி நீதிமன்றத்திலே இருக்கக்கூடிய வழக்குகளை நாம் இங்கே விவாதிக்கக்கூடாது என்று விதி இருக்கிறது என்பது நமக்கு நன்றாகத் தெரியும். ஆனால் ஒரு தடவை Election Commission–லேயிருந்த வழக்கைப் பற்றி இங்கே

2017 மார்ச் 23] [திரு. கரி. இராமசாமி]

பேசக் கூடாது என்று நமது பேரவைத் தலைவர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அது எந்த விதத்திலே நியாயம் என்று எனக்குப் புரியவில்லை.

அடுத்தபடியாக, விதி 110-ன்கீழ் நம்முடைய மரியாதைக்குரிய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் பல திட்டங்களை அறிவித்தார்கள். அப்பொழுது அவர்கள் அறிவித்த அறிவிப்பைப் பாராட்டிப் பேசலாம், அதை விமர்சனம் செய்யக்கூடாது என்று சபாநாயகர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். பொதுவாக விதி 110-ன்கீழ் அறிவிக்கப்படக்கூடிய அறிவிப்புகளின்மீது எந்த விவாதமும் இருக்கக்கூடாது என்பதுதான் விதிகளிலே இருக்கக்கூடியவை. ஆனால் பாராட்டிப் பேசுவதற்கு எந்த விதியிலே, எந்த இடத்திலே இடமிருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை.

முற்பகல் 11-40

அதேபோல, மாற்றுக் கட்சியைச் சார்ந்தவர்கள் இங்கே மூவர் அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது எந்தச் சின்னம் என்று எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஆனால், அவர்களைப் பயன்படுத்தி விதி 110-ன்கீழ் பாராட்டுவதற்கு அனுமதித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது எந்தவிதத்திலே நியாயம் என்றும் எனக்குப் புரியவில்லை.

மற்றொன்று, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இந்த அவையைப் பொறுத்தமட்டில், அவையிலே யார் பெயரையும் சொல்லக்கூடாது என்று விதியே கிடையாது. யார் பெயரை வேண்டுமென்றாலும் சொல்லலாம். பெயரையே சொல்லக்கூடாது என்று விதியிலே இடம் இல்லை. ஆனால், தெளிவாக நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட நபரைச் சொல்லி, அவர்கள் பெயரை சொல்லவேகூடாது என்று உத்தரவிட்டிருக்கின்றார்கள். இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய நிலைமைக்கு நாம் இன்றைக்கு ஆளாகியிருக்கிறோம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.*

திரு. கரி. இராமசாமி: *இதுபோன்று பல பிரச்சினைகளிலே அவர்கள் தொடர்ந்து விதி மீறல்களுக்கு உதவியாக இருந்தார்கள்*

[திரு. கரி. இராமசாமி] [2017 மார்ச் 23

என்று எண்ணும்போது அவர்கள் ஒரு பிரிவினரை ஆதரிக்கிறாரோ என்று எங்களுக்குச் சந்தேகம் ஏற்படுகின்றது என்பது ஒன்று.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.

திரு. கரி. இராமசாமி: இன்னொன்று, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களெல்லாம் இருக்கின்றார்கள். நாங்கள் பேசும்போது, எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் பேசும்போது எங்களை முழுமையாகப் பேசவிட்ட பிறகு நீங்கள் பதில் சொல்ல வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்து தரக்கூடிய பொறுப்பு பேரவைத் தலைவருக்குத்தான் இருக்கிறது. அதை அவர் சரியாக நிறைவேற்றினார்களா என்ற ஓர் ஐயப்பாடு இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து அமைச்சர் பெருமக்கள் எங்கள் நேரத்தை எடுத்துக்கொள்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், அதிலே எங்களது நேரம் குறைகிறது. பேசுவதற்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை. அதையும் உணர்ந்து செயல்பட்டிருக்க வேண்டும். இதன் காரணமாக, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற நம்பிக்கையில்லா தீர்மானத்தை காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஆதரிக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்கள் மீதான நம்பிக்கையில்லா தீர்மானத்திலே இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக இங்கே கருத்துகளைத் தெரிவிப்பதிலே மிகவும் மன வருத்தத்தோடு நான் உங்கள் முன்னே நிற்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடப்பு 15–வது சட்டமன்றம் துவங்கும்போதே ஜனநாயக முறையிலே ஓர் ஆரோக்கியமான பேரவையாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையில், பிரதான எதிர்க்கட்சியினுடைய தலைவர் தளபதியார் அவர்கள் அமைச்சரவையினுடைய பதவியேற்பு விழாவிற்கு வந்தார்கள். அப்படி வந்த நேரத்தில் அவரை மிகவும் கண்ணியக் குறைவான முறையிலே, பின் வரிசையில் அமர வைத்து, அவமானப்படுத்தியதையெல்லாம் பொறுத்துக்கொள்ளாமல், நான்கூட முன்னால் அமர்ந்திருந்தேன். ஆனால், அவர்கள் எனக்கு 5

2017 மார்ச் 23] [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

சீட்டுக்கு பின்னால் இருந்தார்கள். (குறுக்கீடு) அதைக்கூட அவர்கள் பெரிதுபடுத்தாமல், மாண்புமிகு பேரவைத் தலைவருடைய. . .

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது குறித்து அம்மா அவர்களே அதற்கு வருத்தப்பட்டார்கள். உடனடியாக அந்த அதிகாரிகளை அழைத்து "ஏன் அவர்களைப் பின்னாலே அமர்த்தினீர்கள்" என்று கேட்டு, "இதுபோன்ற நிகழ்ச்சிகள் இனிமேல் நடக்கக்கூடாது" என்று உத்தரவு வழங்கியவர் அம்மா என்பதை மறந்துவிடக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் கூறியது சரிதான். நான் அதைத்தான் சொல்ல வந்தேன். அதற்குள் நீங்கள் சொல்லிவிட்டீர்கள். நான் இங்கே என்ன சொல்ல வருகிறேன் என்றால், அந்த அளவுக்குப் பெருந்தன்மையாகப் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அங்கே நடந்துகொண்டார்கள். அதன்பிறகு இங்கே பதவியேற்பு விழா நடைபெற்றது. பதவியேற்பு நடைபெற்ற பின்பு—நான் சொல்ல வந்த கருத்துகளை சொல்லவிடாமல் ஆக்கிவிட்டீர்கள்—அதன்பிறகுகூட பிரதான எதிர்க்கட்சியினுடைய தலைவராக தளபதி அவர்கள் இருக்கின்றார்கள். ஆனால், நம் அவைத் தலைவர் அவர்கள் அவரைத் 'தி.மு. கழகத்தின் உறுப்பினர்' என்றுதான் சொன்னார். எதிர்க்கட்சியின் தலைவர் என்று முதலில் சொல்லவில்லை. முதல் பிரச்சினை அங்கேதான் ஆரம்பமாகிறது. அதன் பிறகு ஐந்து நாட்கள் கழித்துதான் எதிர்க்கட்சியினுடைய தலைவர் என்று குறிப்பிட ஆரம்பித்தார் என்பது நமக்கெல்லாம் தெரியும். ஒட்டுமொத்தத்திலே இங்கே பேரவைத் தலைவராக. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும்.

[2017 மார்ச் 23

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதாக ஒரு தவறான தகவலை இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறார். அருள்கூர்ந்து அவர் சொல்லிய கருத்துகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. முஹம்மது அபூபக்கர், நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்துப் பேசுங்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்குள்ளே நான் செல்லவிரும்பவில்லை. மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அவர்களைப் பற்றிச் சொல்லும்போது 'மிகவும் பின்தங்கிய குடும்பத்திலிருந்து வந்து, நான் இந்த ஆசனத்தில் அமர்ந்திருக்கிறேன்' என்று சொன்னார்கள். அந்தவகையிலே நாமெல்லாம் பெருமைப்படக்கூடிய விஷயம்தான். குறிப்பாக இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கைப் பொறுத்தவரை, அண்ணல் அம்பேத்கர் அவர்கள் சட்ட மேலவைக்குச் செல்வதற்கு உயர் ஜாதியினர் மறுத்தபோது, அவர்களை—நாங்கள் ஆட்சியிலிருந்த—பெங்காலிலிருந்து சட்ட மேலவைக்கு அனுப்பிய இயக்கம் எங்கள் இயக்கம். அந்த வகையிலே பெருமைக்குரியவர்களாக நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களும் இருக்க வேண்டுமென்று நாமெல்லாம் வாழ்த்துகிறோம். அதேநேரத்தில் பல்வேறு நிலைகளிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் அவர்களும், காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களும் இங்கே குறிப்பிட்டதைப்போல இன்னும் சிறந்த முறையில் இந்த அவையை நடத்த வேண்டும்; ஆரோக்கியமாக இந்த அவையை நடத்த வேண்டும்; பாகுபாடு இல்லாமல் இந்த அவையை நடத்த வேண்டும் என்பதுதான் அனைவருடைய ஒட்டுமொத்த விருப்பமாக இருக்கின்றது. ஏனென்று சொன்னால் நான்கு கட்சிகள்தான் இன்று சட்டமன்றத்தில் இடம்பெற்றிருக்கின்றன. அவர்களே அங்கீகரித்திருக்கிறார்கள். ஆளும் கட்சியாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், பிரதான எதிர்க்கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் இயக்கம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகியவைதான். நான்கு கட்சிகளுக்குக்கூட, முழுமையான முறையிலே நேரம் ஒதுக்குவதிலிருந்து அவர்களை

2017 மார்ச் 23] [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

அனுசரிக்கக்கூடிய விஷயங்களில், பல கோரிக்கைகளை நாம் சொல்லும்போது அவர்கள் கண்டும் காணாமல் இருப்பதன் காரணமாகத்தான் அவ்வப்போது பல்வேறு இடர்பாடுகள் எல்லாம் நிகழ்ந்தன என்பதை இங்கே அருமையாக எடுத்துச் சொன்னார்கள்.

தமிழகத்தின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் மற்றும் சில முக்கியமான பிரச்சினைகளை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் சொல்லும்போது அதுகுறித்து உடனடியாக ஒரு தீர்மானமாக அவையிலே நிறைவேற்றினால் காலதாமதம் ஏற்படாது. மத்திய அரசாங்கம் நம்மை வஞ்சிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படாது; போராட்டங்களெல்லாம் நடைபெறாது தடுத்திருக்க முடியும். அவர்கள் காலம் தாழ்த்துவதன் காரணமாகத்தான் அந்த நடவடிக்கைகள் எல்லாம் நடந்து வருகின்றன என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். இப்படி பல்வேறு நிலைகள். அதனுடைய உச்சகட்டமாக அன்று அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய அந்த ஜாதியைப் பற்றிச் சொல்லி என்னை இப்படி அவமானப்படுத்தலாமா என்று சொல்வது, அவர்கள் வகித்துவரும் அந்தப் பதவிக்கு அழகா என்பதுதான் நான் கேட்க விரும்புவது. தனிப்பட்ட ஒரு மதத்தைப் பின்பற்றக்கூடியவனாக நான் இருக்கலாம். ஆனால் சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய நான் எல்லா சமுதாய மக்களுக்காகவும், எல்லா பிரிவினருக்காகவும் பாடுபடக்கூடியவனாகத்தான் இருக்கமுடியுமே தவிர, ஒரு ஜாதிக்கு மட்டும் பாடுபடக்கூடியவனாக இருக்கமுடியாது. அவர்கள் அன்று அவ்வாறு சொன்னது நம்முடைய அவையின் கண்ணியத்தைக் குறைக்கக்கூடிய செயல் என்பதைத்தான் நாங்கள் இங்கு வேதனையோடு குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

முற்பகல் 11–50

அதேபோல, இன்று பிரதான எதிர்க்கட்சி இருக்கின்றது, மற்றவர்களெல்லாம் இருக்கிண்றோம். அவர்களே அதை அங்கீகரித்திருக்கின்றார்கள். நான் இதிலே அதிகமாக ஒன்றும் பேச விரும்பவில்லை. நான் இங்கே இருக்கக்கூடிய அ.தி.மு.க. உறுப்பினர்களுடைய முன்னிலையிலே ஒரே ஒரு நியாயத்தைக் கேட்கின்றேன். இருப்பது நான்கு கட்சிகள்தான். மாண்புமிகு மறைந்த முன்னாள் முதல்வர் அவர்கள் அ.தி.மு.க.–வுக்கு அலுவலகத்தை வழங்கினார்கள். தி.மு.க.–வுக்கு வழங்கினார்கள். காங்கிரஸ் கட்சிக்கு வழங்கினார்கள். இந்திய யூனியன் முஸ்லிம்

பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [*2017 மார்ச் 23*

லீக் கட்சிக்கும் ஓர் அலுவலகத்தை அம்மா அவர்கள் வழங்கி, அந்த அலுவலகம் புனரமைக்கப்பட்டு, சாவியை கொடுக்கக்கூடிய நேரத்தில்—அலுவலகத்திலுள்ளவர்கள் அனைவருக்கும் தெரியும். எங்களுக்கு சிறிய ஓர் அறை—அதைத் தர மறுத்தது நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டியே ஆக வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்களே அனுமதித்ததை இவர்கள் எப்படித் தடுக்கலாம்? எங்களுக்கு வேதனைதான். அதைக்கூட நான் பொறுத்துபடுத்தவில்லை. "அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்" என்ற அடிப்படையிலே நான் பொறுமையாக காத்திருக்கின்றேன். எங்களுடைய கட்சியின் சார்பில் இங்கே இருப்பது ஓர் உறுப்பினராக இருக்கலாம். ஆனால், இந்திய தேர்தல் ஆணையத்தாலே அங்கீகரிக்கப்பட்ட மாநில கட்சி. எங்களுக்கென தனிச் சின்னம் இருக்கின்றது. இதே அவையில் எதிர்க்கட்சித் தலைவராக எங்களுடைய காயிதே மில்லத் அவர்கள் இங்கே இருந்தார்கள். அவர்களுக்கு என்ன மனக் கஷ்டம்? ஒரு சிறிய அறை கொடுப்பதில், அவர்களுக்கு என்ன பிரச்சினை? ஏன் இப்படி இருக்கின்றார்கள்? சபாநாயகராக இருக்கக்கூடியவர்கள் நேரம் ஒதுக்குவதும். இந்த நியாயத்தின் அடிப்படையில்தான். இந்தக் கூட்டத்தொடரில் ஒரு நாள்தான் பேசுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. அதில்கூட, முழுமையாக நான் பேச முடியவில்லை. இதெல்லாம் எங்களுடைய உள்ளக்கிடக்கை, மன வேதனையை இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

எல்லா நிலைகளிலும், எல்லோரையும் அரவணைத்துச் செல்லக்கூடியவராகத்தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இருக்க வேண்டுமென்ற எங்களுடைய கருத்தையும் அழுத்தமாகத் தெரிவித்துக்கொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் முன்மொழிந்திருக்கக்கூடிய பேரவைத் தலைவர் அவர்கள் மீதான நம்பிக்கையில்லா தீர்மானத்தை நாங்களும் வழிமொழிகின்றோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் சீரிய கோட்பாட்டுக்குப் பெருமை சேர்க்கும் பணி பேரவையின் தலைவருக்கு இருக்கிறது' என்று பேரறிஞர்

2017 மார்ச் 23] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தன் கடமையை, தன் ஆற்றலை, எதிர்க்கட்சியாக இருந்தாலும், அவர்களுக்கு நேரத்தை ஒதுக்குவதிலும் தலைசிறந்தவராக நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் திகழ்ந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இரண்டாவது முறையாக பேரவைத் தலைவராக அரியணையிலே அமர்த்தப்பட்டு, 'ஏதோ ஒரு குக்கிராமத்திலே பிறந்து, சட்டமன்றத்திலே சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராக, இன்று பேரவைத் தலைவராக அரியணையிலே அமர்ந்திருக்கின்ற நீங்கள், எப்படிப் பேரவையை நடத்தினீர்கள் என்பது இந்த நாட்டு மக்களே வியக்கத்தக்க அளவுக்கு இருக்கிறது எல்லோரையும் அரவணைத்துச் செல்கின்ற பாங்கு உங்களிடையே இருக்கிறது' என்று (மேசையைத் தட்டும் ஒலி) நான் சொல்லவில்லை, மறைந்தும் மறையாமலும் இந்த உலக வரலாற்றில் இடம் பெற்றிருக்கின்ற ஒப்பற்ற தலைவியான புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அப்படிப்பட்ட பெருமைக்குரியவராக இரண்டாவது முறையாக இந்தப் பேரவையினுடைய தலைவராகப் பொறுப்பேற்று, தமிழகத்தின் வரலாற்றில் ஒரு கிராமத்திலே பிறந்து, இன்று சட்டமன்றப் பேரவைத் தலைவராக இருந்து தன் பணிகளை ஆற்றுகிற நல்வாய்ப்பினை அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், இதைக்காட்டிலும் நற்சான்றுகள் எவராலும் தர முடியாது என்பதை நான் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் பேரவைத் தலைவர்மீது நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களால் விதி 68–ன்கீழ் எனக் குறிப்பிட்டு முதல் நாளன்று கடிதம் வழங்கப்படவில்லை. அதற்குப் பிறகு, அன்றே 'விதியைக் குறிப்பிடவில்லையென்றாலும், என்மீது கொடுக்கப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லா தீர்மானத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன்' என்று பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்டவர் நம்முடைய பேரவைத் தலைவர் என்பதை நான் இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு, விதி 68–ன்கீழ் இரண்டாவது கடிதம் வழங்கப்பட்டிருக்கிறது.

பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [*2017 மார்ச் 23 முற்பகல் 11–55*

நான் அதையெல்லாம் இங்கு குறிப்பிடுவதற்குக் காரணம், நாங்கள் 2006 ஆம் ஆண்டு மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர்மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவந்தபோது, அன்றைய முதலமைச்சராக இருந்த உங்கள் தலைவர் அவர்கள் இதே சட்டமன்றத்தில் குறிப்பிட்டார். 'நான் 1957–லிருந்து 40 ஆண்டுக் காலம் சட்டமன்றத்தில் பணியாற்றிய அனுபவம் பெற்றவன்; பலமுறை முதலமைச்சராக இருந்திருக்கிறேன்' என்று குறிப்பிட்டு ஒரு கருத்தைச் சொன்னார்கள். 'பேரவைத் தலைவர் எவராக இருந்தாலும், நாம் பேசுகிறபோது கடினமான வார்த்தைகளைச் சொல்லி, நீங்கள் அமருங்கள் என்று சொல்கிறபோதுகூட, இந்தச் சட்டமன்றத்தில் நாங்கள் எதிர்க்கட்சியாக அமர்ந்து கொண்டிருக்கின்றபோது, அதற்கு நாங்கள் திருப்பி பதில் அளிக்கவில்லை; நல்வழிப்படுத்துகிறார்கள். ஆகவே இதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்' என்று அன்றைய முதலமைச்சராக இருந்த உங்கள் தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார் என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

உங்களுடைய காலத்தை நீங்கள் எண்ணிப் பார்க்கின்றபோது, இதே சட்டமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தப் பெருமைவாய்ந்த சட்டமன்றத்தில், 1972 ஆம் ஆண்டு என்ன நடைபெற்றது என்பதையும் நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். ஆக, அன்று எப்படிச் சட்டமன்றம் நடைபெற்றது? அன்றைக்கு இரு சபைகள்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் ஒரே நேரத்தில் இருக்கையில் அமர்ந்து கொண்டிருந்த காட்சி ஒரு காலத்தில் இருந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே நினைவூட்ட விரும்புகிறேன். ஆக, அப்படிப்பட்ட நிலை அன்று இருந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மீது இன்று நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவருகிறபோது, இங்கே பல கருத்துகளை நீங்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறீர்கள். இதே அவையில் அன்றைக்கு அமைச்சரவைமீது நம்பிக்கைக் கோரும் தீர்மானம் கொண்டு வந்தபோது, நடைபெற்ற நிகழ்ச்சிகளை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த நாட்டிலே இருக்கின்ற மக்கள் கூர்ந்து கவனித்தார்கள். தொலைக்காட்சியின் மூலமாகக்

2017 மார்ச் 23] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

காணுகின்றபோது, இது சட்டமன்றமா? என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது? என்ற நிலையை, நீங்கள் நடத்திய நாடகத்தைப் பார்க்கின்றபோது, பெயர் எவ்வளவு கெட்டுப்போய் இருக்கிறது என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) அன்று நாங்கள் அமர்ந்து கொண்டிருந்தோம். புத்தகங்களை எங்கள்மீது வீசினீர்கள். அன்று நாங்கள் அமைதி காத்தோம். அவ்வாறு நாங்கள் அமைதி காத்ததை நாட்டு மக்கள் அன்று பார்த்தார்கள். 122 சட்டமன்ற உறுப்பினர்களும் எப்படி அமைதி காத்திருக்கிறார்கள் என்பதைக் காணுகிறபோதுதான் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பேரவையின் பெருமை அன்றைக்கு நிலைநாட்டப்பட்டிருக்கிறது. நாங்கள் ஆளுங்கட்சியில் இருக்கிறோம் என்பதல்ல. எதிர்க்கட்சியிலே இருக்கின்ற நீங்கள் என்ன காரியங்களை நடத்தினீர்கள் என்று இன்றைக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

இங்கே அமர்ந்து கொண்டிருக்கின்ற நீங்கள், சட்டப் பேரவைத் தலைவரிடத்திலே தேதியைத் தள்ளி வையுங்கள் என்று முதலில் கோரினீர்கள். அதற்குப் பிறகு secret ballot முறையில் வாக்கெடுப்பு நடைபெற வேண்டும் என்று சொன்னீர்கள். இந்த முறைகள் கடந்த காலங்களில் கடைபிடிக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். 1952–ல் இராஜாஜி அவர்கள் இருந்த காலத்தில் நடைபெற்றிருக்கிறதா? 1972–ல் திராவிட முன்னேற்றக் கழகம் நம்பிக்கை வாக்கு பெறுகிறபோது நடைபெற்றிருக்கிறதா? 1988–ல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நம்பிக்கை வாக்கு பெறுகின்றபோதும் நடைபெற்றிருக்கின்றதா? என்பதை நீங்கள் நினைவுபடுத்திப் பார்க்க வேண்டும்.

உத்தரப் பிரதேச மாநிலம் குறித்து நீங்கள் சொன்னீர்கள். வேறு மாநிலங்களில் நடைபெற்றது குறித்தும் குறிப்பிட்டுச் சொன்னீர்கள். உங்களைப் பார்த்து நான் கேட்கிறேன். உத்தரப் பிரதேச மாநிலத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு என்பது எப்படி நடந்தது என்பது அந்த மாநில மக்களுக்குத் தெரியும். அங்கே கன்சிராம் போட்டியிடுகிறார். மத்தியிலே அமர்ந்து கொண்டிருக்கிறார் பேரவைத் தலைவர். அதற்குப் பக்கத்திலே ஓர் இருக்கை. அவரை எதிர்த்துப் போட்டியிடுபவரை மற்றொரு இருக்கையில் அமர்த்தி, அந்த இருக்கைகளுக்கு முன்னாலே சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் வந்து கையொப்பமிட்டு, வாக்குகள் அளிக்க வேண்டும் என்று சொல்கிறபோது, secret ballot என்று அதற்குப்

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2017 மார்ச் 23

பெயரா? அதுகுறித்து நீங்கள் பேசும்போது கருத்துகளைச் சொன்னீர்கள். அப்படிப்பட்ட நிலை அங்கு நடைபெற்றிருக்கிறது.

ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தூய்மையோடு இந்தச் சபையை நடத்தியிருக்கிறார்கள். இதை யாராலும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்தாண்டுக்காலம், புனிதமாக இந்தப் பேரவையை நடத்திக் காட்டியிருக்கிறார். உங்களைப் பொறுத்தவரை, இந்த ஆட்சியைக் கலைத்துவிட வேண்டும்; இந்த ஆட்சி நடைபெறக்கூடாது என்ற எண்ணத்தோடு அன்றைக்கு நடந்துகொண்டீர்கள். அன்றைக்கு நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு பேரவைத் தலைவரின் கையை பிடித்து இழுத்தீர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் மைக்கை உடைத்தீர்கள். இங்கே அமர்ந்திருந்த சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அவர்களின் மைக்கை உடைத்து எறிந்துவிட்டு, இந்த மேடையிலே ஏறி நீங்கள் நடனமாடியதையெல்லாம் இந்த நாடு பார்த்துக் கொண்டிருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) இதெல்லாம் அன்று நடைபெற்றதா? இல்லையா? நாங்கள் தொலைக்காட்சியிலே பார்த்ததையும் சொல்கிறோம். நான் இதையெல்லாம் குறிப்பிடுவதற்குக் காரணம், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மீது ஒரு நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவருகிறபோது, நீங்கள் எப்படி நடந்துகொண்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

நண்பகல் 12–00

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறித்து, அன்று நடந்த நிகழ்ச்சி குறித்து மாண்புமிகு முன்னவர் அவர்கள் சொல்கிறார். இது குறித்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. வழக்கு இருக்கும்போது நாங்கள் நடந்தோம், அப்படி இப்படியென்று சொல்லலாமா? சொல்லக்கூடாது. நாங்கள் பேசினால் மட்டும் உடனே 'வழக்கு இருக்கிறது, வழக்கு இருக்கிறது. எனவே, பேசக்கூடாது' என்கிறீர்கள். ஆனால் தற்போது அனைத்தையும் விவரிக்கிறார்கள். இது எப்படி? எனவே அவர் பேசியதையெல்லாம் expunge செய்ய வேண்டும். (குறுக்கீடுகள்)

2017 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு.கே.ஏ.செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிடுகிறபோது. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். அவை முன்னவர் அவர்கள் பேசுகிறார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவை முன்னவர் அவர்கள் பேசும்போது நீங்கள் அமருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் பேசிவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவை முன்னவர் அவர்கள் பேசுகிறார். நீங்கள் பேசும்போது அனைவரும் அமைதியாக இருந்தார்கள் அல்லவா? (குறுக்கீடுகள்) உங்கள் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது அனைவரும் அமைதியாக இருந்தார்கள் அல்லவா? (குறுக்கீடுகள்) நீங்கள் அமருங்கள். அமைதியாக உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர், பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மற்றவர்களை உட்காரச் சொல்லுங்கள். உங்கள் கட்சியிலுள்ள மற்றவர்களை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சியில் உள்ள மற்றவர்களை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் ஒருவர் மட்டும்தானே பேசப்போகிறீர்கள்? (குறுக்கீடுகள்)

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் தங்களிடத்தில் கேட்பது இதுதான். இப்படிப்பட்ட சம்பவம் ஒன்று நீதிமன்றத்தில் இருக்கும்போது, நாங்கள் பேசினால், 'அது நீதிமன்றத்தில் இருக்கிறது, எனவே பேசக்கூடாது' என்று நமது மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் சொல்வார். எனவே, அவர் பேசியதை expunge செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் அன்றைக்கு டேபிள் மேல் ஏறி நின்றீர்கள் அல்லவா? அன்றைக்கு டேபிள் மேல் ஏறி நின்றீர்களா, இல்லையா?

[2017 மார்ச் 23

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆமாம். டேபிள் மேல் ஏறினோம். (குறுக்கீடுகள்) நீங்கள் இப்படிச் சொன்னால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) நீங்களே கேட்டால் என்ன சார் அர்த்தம்? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் அன்றைக்கு டேபிள் மேல் நின்றீர்கள் அல்லவா? அதைத்தான் அவர் சொன்னார். மாண்புமிகு அவை முன்னவர் பேசுங்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உட்காருங்கள். நீங்கள் அன்று டேபிளின்மேல் ஏறி நின்றதை அவர் குறிப்பிட்டுச் சொன்னார், நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நான் வழக்கிற்குள்ளே செல்லவில்லை. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நான் உங்கள் பெயரைச் சொன்னேனா? நான் வழக்கிற்குள்ளே செல்லவில்லை. வழக்கில் இருப்பது வேறு. வழக்கிற்குள்ளே சென்று ஒருவருடைய பெயரை உச்சரித்திருந்தால் நீங்கள் இதைச் சொல்லலாம். நான் வழக்கைப் பற்றியும் சொல்லவில்லை; வழக்கிற்குள்ளும் போகவில்லை. (குறுக்கீடுகள்) நடந்த சம்பவத்தைச் சொல்வது வேறு, உங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தால் கூட . . .(குறுக்கீடுகள்) நான் அதை விட்டுவிடுகிறேன். ஆகவே, இங்கு அமர்ந்துகொண்டிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர், துணைத் தலைவர் ஆகியோரைப் போன்று காங்கிரஸ் நண்பர்கள் சொல்லட்டும் அதை, நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) ஏனென்று சொன்னால், அவர்கள் வெளிநடப்புச் செய்தார்கள். என்ன காரணம் என்பதை நீங்கள் புரிந்துகொண்டிருக்க வேண்டும்.

சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் கண்ணியத்தோடு உங்களுக்கு நேரத்தை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். நான் அதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆளும்கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கொடுக்கப்பட்ட நேரம் 33 மணி 11 நிமிடங்கள். ஆனால் திராவிட முன்னேற்றக்

2017 மார்ச் 23] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

கழகத்திற்கு கொடுக்கப்பட்ட நேரம் 50 மணி 32 நிமிடங்கள் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. (குறுக்கீடுகள்) அந்த வகையில், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேசுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நடுநிலையோடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் நடந்துகொண்டார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அவர் முடிக்கட்டும். அவர் முடித்த பிறகு பேசுங்கள். (குறுக்கீடுகள்) சரி பேசுங்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தைச் சொல்கிறார்கள். ஆனால் நாங்கள் பேசிய நேரம் எவ்வளவு? 15 நிமிடங்கள் துரைமுருகனுக்கு ஒதுக்கினால் 10 நிமிடங்கள் இவர்களே பேசுவார்கள். (குறுக்கீடுகள்) பிறகு நாங்கள் என்ன செய்வது? (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யார் பேசினார்கள், யார் பேசவில்லை என்பதல்ல. உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற, நீங்கள் பேசத் துவங்கியதிலிருந்து முடியும் வரையுள்ள நேரத்தை நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம். யார் குறுக்கிட்டார் என்பதல்ல. இங்கிருக்கிற காங்கிரஸ் நண்பரைப் பார்த்துக் கேட்டுக்கொள்கிறேன். அவர் செய்தது நியாயமா என்பதை மட்டும் நீங்கள் தெரிவித்தால் நன்றாக இருக்கும். ஆகவே, சட்டமன்றப் பேரவைத் தலைவரைப் பொறுத்தவரையிலும், மனிதநேயத்தோடு, கண்ணியம் காக்கின்ற வகையில் எதிர்க்கட்சி என்று பார்க்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எங்களை வேண்டுமானாலும் அமருங்கள் என்று சொல்வார்களே தவிர, எதிர்க்கட்சித் தலைவர் எழுந்தவுடனேயே அவருக்கு அனுமதி வழங்கியிருக்கிற நியாயமான, நேர்மையான ஒரு சட்டமன்றப் பேரவைத் தலைவர்மீது (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தை நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். இதை முறியடித்துக்காட்டி, மீண்டும் சட்டமன்றப் பேரவைத் தலைவரை இங்கே அமர்த்தி, (மேசையைத் தட்டும் ஒலி) தாமரைபோல மலர்ந்து, இந்தப் பேரவையிலே அமர வேண்டும், அமர வேண்டும் என்று வாழ்த்தி, விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

[2017 மார்ச் 23

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–05

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறையாத பெரும் சக்தி திராவிட சக்தி. தன்மான சக்தி தமிழர்களைக் காக்கும் தெய்வ சக்தி, (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றரைக் கோடி தொண்டர்களின் உயிர் சக்தி, (மேசையைத் தட்டும் ஒலி) 8 கோடி தமிழர்களின் இதய சக்தி, மாண்புமிகு அம்மா என்னும் அற்புத சக்தியால் (மேசையைத் தட்டும் ஒலி) அடையாளம் காட்டப்பட்டவர் சட்டப் பேரவைத் தலைவர் மாண்புமிகு திரு. ப. தனபால் அவர்கள். 10–10–2012 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு திரு. ப. தனபால் அவர்களை வாழ்த்தி, பாராட்டி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உரையாற்றினார்கள். அப்போது அவர் 'மாண்புமிகு பேரவைத் தலைவராக பொறுப்பேற்றுக்கொண்டிருக்கின்ற தாங்கள் சாதாரண ஏழை விவசாயக் குடும்பத்தில், பின்தங்கிய பகுதியில், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்து, முதுகலைப் பட்டம் பெற்றவர். இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, தமிழகச் சட்டமன்ற வரலாற்றில் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட (மேசையைத் தட்டும் ஒலி) தாழ்த்தப்பட்ட அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்த முதல் பேரவைத் தலைவர் தாங்கள்தான் என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) தாங்கள் இந்தப் பேரவையின் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டதிலும் எனக்கு மிக்க மகிழ்ச்சி. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டமன்றத்தில் தாங்கள் வரலாறு படைத்தீர்கள்' என்று மாண்புமிகு அம்மா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பொது மக்களோடு குறிப்பாக, ஏழை எளிய மக்களோடு நெருக்கமான தொடர்பும், உறவும் கொண்டவராக தாங்கள் விளங்கியிருக்கின்றீர்கள். 1977 ஆம் ஆண்டிலிருந்து 1988 ஆம் ஆண்டுவரை தொடர்ந்து 3 முறை சங்கரி சட்டமன்றத் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தாங்கள் அனைவரும் பாராட்டும்வண்ணம் திறம்படப் பணியாற்றியிருக்கின்றீர்கள் என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

15–வது சட்டமன்றத்தின் பேரவைத் தலைவராக இரண்டாவது முறையாக மாண்புமிகு திரு. ப. தனபால் அவர்கள்

2017 மார்ச் 23] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

தேர்ந்தெடுக்கப்பட்டபோது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'ஒரு சிறந்த சபாநாயகராக விளங்க வேண்டுமென்றால், திரு. ஜி. சிவசண்முகம் பிள்ளை அவர்களின் கண்டிப்பும், டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்களுடைய எளிமையான அணுகுமுறையும் இருக்க வேண்டும். இந்த இரண்டையும் ஒருங்கே பெற்றவர் தாங்கள் என்பதில் (மேசையைத் தட்டும் ஒலி) இரு வேறு கருத்திற்கு இடம் இல்லை' என்று சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களின் திறமை, அணுகுமுறை ஆகியவற்றைப் பாராட்டி புகழாரம் சூட்டினார் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாமெல்லாம் தெய்வமாக வணங்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே சட்டமன்றப் பேரவைத் தலைவர் மாண்புமிகு திரு. ப. தனபால் அவர்களைப்பற்றி இவ்வளவு சிறப்பாகக் கூறியுள்ளார். இதற்குமேல் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு வேறு எந்தவொரு சான்றிதழும் தேவையில்லை என்று நான் திடமாகக் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மனவளம், தைரியம், அன்பு, அடக்கம், பண்பு, பகைமை பேசுபவரிடம் அன்பு காட்டுதல், விடாமுயற்சி, தன்னடக்கம் ஆகிய நற்பண்புகள் ஒருங்கே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் புதைந்து கிடந்ததை அறிந்த காரணத்தினால்தான், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களால் பேரவைத் தலைவர் பதவிக்கு அடையாளம் காட்டப்பட்டார் என்று கருதுகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களால் அடையாளம் காட்டப்பட்ட அனைவரும் பணியில் சிறந்து விளங்கினர். அந்த வகையில் சிறப்பாகப் பணியாற்றி, தான் வகித்த பதவிக்கு மேலும் சிறப்புச் சேர்த்தவர் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் கடந்த மாதம் 16 ஆம் தேதி என்னைப் பதவி ஏற்க அழைப்பு விடுத்தார். மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு அமைந்த இந்த அரசை '15 நாட்களுக்குள் சட்டமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும்' என மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உத்தரவிட்டார்கள். மாண்புமிகு ஆளுநரின் உத்தரவிற்கிணங்க சென்ற மாதம் 18 ஆம் தேதியன்று சட்டமன்றத்திலே நம்பிக்கை வாக்குக் கோரும் தீர்மானத்தை முன்மொழிந்தேன். மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் 'நான் சட்டமன்றப் பேரவையின் விதிகளின்படிதான் சட்டமன்றத்தை நடத்துகின்றேன்' என்று கடைசிவரையில் இச்சபையின் கண்ணியத்தையும், மாண்பையும்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2017 மார்ச் 23

காக்க (மேசையைத் தட்டும் ஒலி) விதிமுறைகளின்படி சட்டமன்றத்தை நடத்திய விதம் அனைத்து சட்டமன்றப் பேரவைத் தலைவர்களுக்கும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–10

இத்தகைய சட்டப் பேரவைத் தலைவர் தலைமையில் நடைபெறும் இம்மாமன்றத்தில் நான் முதலமைச்சராக இருப்பதை பெருமையாகக் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவரைப்பற்றிச் சொன்ன கருத்துகள் ஏற்புடையதல்ல என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரி எதிர்க்கட்சிகள் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தினை நான் முழுமையாக எதிர்க்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தனித் தீர்மானத்தின்மீது இப்போது வாக்கெடுப்பு. "மாண்புமிகு திரு. ப. தனபால் அவர்களைப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று இப்பேரவை தீர்மானிக்கிறது" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

எதிர்ப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

எதிர்ப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

எதிர்ப்போரே அதிகம், தீர்மானம் தோல்வியுற்றது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

திரு. துரைமுருகன்: We demand Division.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு Division வேண்டும்.

பிற்பகல் 12–15 to *12–25*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைச் செயலாளர் அவர்கள் அழைப்பு மணியை, அதாவது Quorum Bell–ஐ மூன்று முறை ஒலிக்கச் செய்வார்கள். அழைப்பு மணியை அழுத்துமாறு செயலாளர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

2017 மார்ச் 23] [பேரவைத் துணைத் தலைவர்]

(அழைப்பு மணி மூன்று முறை ஒலிக்கப்பெற்றது.)

பேரவையின் நுழைவாயில்கள் அனைத்தையும் மூடும்படி அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். பேரவையின் அனைத்து வாயில்களும் மூடப்பட்டுவிட்டனவா?

(பேரவையின் நுழைவாயில்கள் அனைத்தும் மூடப்பெற்றன.)

பேரவை விதி 99(5)-ன்கீழ் குறிப்பிட்டுள்ளவாறு, பேரவை விதி 99(2)-ல் கூறியபடி இரண்டாவது முறையாக இப்பிரச்சினையைப் பேரவையின்முன் வைக்கிறேன். "மாண்புமிகு திரு. ப. தனபால் அவர்களைப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று இப்பேரவை தீர்மானிக்கிறது" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

எதிர்ப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

எதிர்ப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

எதிர்ப்போரே அதிகம், தீர்மானம் தோல்வியுற்றது. (குறுக்கீடுகள்)

குரல் வாக்கெடுப்பு மீண்டும் மறுக்கப்பெற்றுள்ளதால், எண்ணிக் கணிக்கும் முறையில் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. வாக்கெடுப்பு நடக்கும் நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அவரவருக்கென ஒதுக்கப்பட்ட இருக்கையிலே அமர்ந்திட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் இருக்கையிலிருந்து வெளியே செல்லவோ, இன்னொருவர் இருக்கைக்குச் செல்லவோ கூடாது. வாக்கெடுப்பு முடியும்வரை அவரவர் இருக்கையிலேயே இருக்க வேண்டும்.

நம்முடைய பேரவை 6 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள். ஒவ்வொரு பிரிவாக நான் வாக்கெடுப்பு நடத்த உள்ளேன். பேரவை விதி 99 உள்விதி (5)-ன்கீழ் தீர்மானத்தை ஆதரிப்போர் 'ஆம்' என்கிற மாண்புமிகு உறுப்பினர்களையும், தீர்மானத்தை எதிர்ப்போர் 'இல்லை' என்கிற மாண்புமிகு உறுப்பினர்களையும், நடுநிலை வகிக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களையும் தனித்தனியே பகுதி வாரியாக, blockwise எழுந்து நிற்குமாறு அழைப்பேன். அவ்வாறு

[பேரவைத் துணைத் தலைவர்] [2017 மார்ச் 23

எழுந்து நிற்பவர்களின் பெயர்கள், செயலாளர் அவர்களால் ஒவ்வொரு பெயராகப் படிக்கப்பெற்ற பின்னர், பெயர் படிக்கப்பெற்ற அந்தக் குறிப்பிட்ட மாண்புமிகு உறுப்பினர் தனது இருக்கையிலே அமர்ந்துகொள்ளலாம்.

பேரவைமுன் உள்ள கேள்வி

"மாண்புமிகு திரு. ப. தனபால் அவர்களைப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று இப்பேரவை தீர்மானிக்கிறது"

பகுதி–1

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
2. மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்
3. மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு
4. மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு
5. மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்
6. திரு. கு. ராஜேந்திரன்
7. திரு. அம்மன் கே. அர்ச்சுணன்
8. திரு. இரா. குமரகுரு
9. திரு. மு. கோதண்டபாணி
10. திரு. மா. கோவிந்தராசு
11. திரு. மு. சக்ரபாணி
12. திரு. ஆர். தங்கதுரை

13. திரு. ரா. தமிழ்ச்செல்வன்

14. திரு. கே.எஸ். தென்னரசு

15. திரு. ஆர். நடராஜ் (மேசையைத் தட்டும் ஒலி)

16. திரு. வி. பன்னீர்செல்வம்

17. திரு. ஏ.கே. போஸ்

18. திரு. கே.ஏ. பாண்டியன்

19. திரு. என்.ஜி. பார்த்திபன்

தீர்மானத்திற்கு தடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

பகுதி–2

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

20. மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்

21. மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்

22. மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு

23. மாண்புமிகு திரு. பி. தங்கமணி

24. மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி

25. மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்

26. மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்

27. மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்

28. மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி

29. மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி
30. மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்
31. மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்
32. மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்
33. மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்
34. திரு. வீ. அலெக்சாண்டர்
35. திரு. பா. ஆறுமுகம்
36. திரு. ஏ. இரத்தினசபாபதி
37. திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்
38. திரு. கே.வி. இராமலிங்கம்
39. திரு. சி.வி. இராஜேந்திரன்
40. திரு. எ.பி. சக்திவேல்
41. திரு. அ. சண்முகம்
42. திரு. ப. சத்திய நாராயணன்
43. திரு. இரா. சந்திரசேகர்
44. திரு. சி. சந்திரசேகரன்
45. திரு. வே.பொ. சிவசுப்பிரமணி
46. திரு. ஆர்.எம். சின்னதம்பி
47. திருமதி கு. உமா மகேஸ்வரி
48. திருமதி வி. கஸ்தூரி வாசு
49. திருமதி ம. கீதா
50. திருமதி ப. சத்யா
51. திருமதி மு. சந்திரபிரபா
52. திருமதி பொன். சரஸ்வதி

53. திருமதி கு. சித்ரா

54. திருமதி மு. பரமேஸ்வரி

55. திரு. பி.வி. பாரதி

56. திரு. ஆர். பாலசுப்பிரமணி

57. திரு. கே.பி.பி. பாஸ்கர்

58. திரு. அ. பிரபு

59. திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்

60. திரு. அ. மருதமுத்து

தீர்மானத்திற்கு நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

—எவருமில்லை—

பகுதி–3

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

—எவருமில்லை—

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

61. மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்

62. மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா

63. மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்

64. மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்

65. மாண்புமிகு திரு. இரா. காமராஜ்

66. மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்

67. மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்

68. மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி

69. மாண்புமிகு திரு. க. பாஸ்கரன்

70. மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்

71. மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி

72. மாண்புமிகு திரு. ப. பாலகிருஷ்ணா ரெட்டி

73. திரு. ஐ.எஸ். இன்பதுரை

74. திரு. எஸ். ஈஸ்வரன்

75. திரு. டி.எ. ஏழுமலை

76. டாக்டர் கா. கதிர்காமு

77. திரு. V.T. கலைச்செல்வன்

78. திரு. ஆர். கனகராஜ்

79. திரு. கு. குணசேகரன்

80. திரு. ஆர். சுந்தரராஜ்

81. திரு. எதிர்க்கோட்டை எஸ்.ஜி. சுப்பிரமணியன்

82. திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்

83. திரு. எம். செல்வராசு

84. திரு. C.V. சேகர்

85. திரு. தங்க. தமிழ்ச்செல்வன்

86. திரு. அ. நடராஜன்

87. திரு. பி.எம். நரசிம்மன்

88. திரு. பா. நீதிபதி

89. டாக்டர் V.P.B. பரமசிவம்

90. திரு. ப. பலராமன்

91. திரு. எஸ். பவுன்ராஜ்

92. திரு. கே. பழனி

93. திரு. பெ. பழனியப்பன்

94. திரு. சோ. மாரியப்பன் கென்னடி

95. திரு. எஸ். முத்தையா

96. திரு. ஆர். முருகன்

97. திரு. என். முருகுமாறன்

98. திரு. ஆர். முருகையா பாண்டியன்

99. திரு. தூசி கே. மோகன்

100. திரு. சு. ரவி

101. திரு. வி. ராதாகிருஷ்ணன்

102. திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்

103. திரு. அ. ராமு

104. திரு. வி.வி. இராஜன் செல்லப்பா

105. திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற
கே.ஆர். ராஜாகிருஷ்ணன்

106. திரு. சி. ராஜா

107. திரு. கோ. லோகநாதன்

108. திரு. விருகை V.N. ரவி

தீர்மானத்திற்கு நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

—எவருமில்லை—

பகுதி–4

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1. திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி

2. திரு. கரி. இராமசாமி

3. திருமதி எஸ். விஜயதரணி

4. திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்
5. திரு. ஜே.ஜி பிரின்ஸ்
6. திரு. எச். வசந்தகுமார்
7. திரு. செ. ராஜேஷ் குமார்
8. திரு. ஆர். கணேஷ்
9. திரு. வி.எஸ். காளிமுத்து
10. திரு. ச. பாண்டி
11. திரு. பெ. சுப்ரமணி
12. திரு. மா. சுப்பிரமணியன்
13. திரு. துரை. கி. சரவணன்
14. திரு. ஏ.பி. நந்தகுமார்
15. திரு. அ. நல்லதம்பி
16. திரு. கே.என். நேரு
17. திரு. பழனிவேல் தியாக ராஜன்
18. திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்
19. திரு. ஓய். பிரகாஷ்
20. திரு. சபா. ராசேந்திரன்
21. திரு. ஆர். காந்தி
22. திரு. டி.பி.எம். மைதீன்கான்
23. திரு. எம்.கே. மோகன்
24. திரு. எஸ். ரகுபதி
25. திரு. ப. ரங்கநாதன்
26. திரு. ஜெ. அன்பழகன்

2017 மார்ச் 23] [பேரவைத் துணைத் தலைவர்]

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

109. திரு. சே. கருணாஸ்

110. திரு. உ. தனியரசு

111. திரு. எம். தமிமுன் அன்சாரி

112. திரு. க.நா. விஜயகுமார்

113. திரு. கே.எஸ். விஜியகுமார்

114. திரு. என்.டி. வெங்கடாச்சலம்

115. திரு. கோ. வெங்கடாஜலம்

116. திருமதி ப. மனோன்மணி

117. திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்

118. திரு. எம். ரெங்கசாமி

119. திரு. V. செந்தில்பாலாஜி

120. திரு. ச. வெற்றிவேல்

121. திரு. P. வெற்றிவேல்

122. திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்

தீர்மானத்திற்கு நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

பகுதி–5

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

27. திரு. அர. சக்கரபாணி

28. திரு. கு. பிச்சாண்டி

29. திரு. எஸ். அம்பேத்குமார்

30. டாக்டர் ஆர்.டி. அரசு

31. திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்

32. திரு. தா.மோ. அன்பரசன்

33. திரு. க. அன்பழகன்

34. திரு. எஸ். ஆஸ்டின்

35. திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்

36. திரு. கு. இராதாமணி

37. திரு. எம். இராமச்சந்திரன்

38. திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்

39. திரு. எஸ்.ஆர். இராஜா

40. திரு. இரா. இராஜேந்திரன்

41. திரு. பி.என்.பி. இன்பசேகரன்

42. திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்

43. திரு. தா. உதயசூரியன்

44. திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்

45. திரு. வெ. கணேசன்

46. திரு. இ. கருணாநிதி

47. திரு. பி. மூர்த்தி

48. திரு. துரை. சந்திரசேகரன்

49. திரு. கே.பி.பி. சாமி

50. திரு. சிவ.வீ. மெய்யநாதன்

51. திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி

52. திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்

53. திரு. எஸ். சுதர்சனம்

54. திரு. க. சுந்தர்

55. முனைவர் கோவி. செழியன்

56. திரு. அ. சௌந்தரபாண்டியன்

57. திரு. பி.கே. சேகர்பாபு

58. திரு. கே.வி. சேகரன்

59. திரு. சௌ. தங்கப்பாண்டியன்

60. திரு. தங்கம் தென்னரசு

61. திரு. மு. திராவிடமணி

62. முனைவர் க. பொன்முடி

63. திரு. உ. மதிவாணன்

64. திரு. த. மனோ தங்கராஜ்

65. திரு. கே.எஸ். மஸ்தான்

66. டாக்டர் இரா. மாசிலாமணி

67. திரு. பி. முருகன்

68. திரு. கே.எஸ். மூர்த்தி

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

—எவருமில்லை—

தீர்மானத்திற்கு நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

—எவருமில்லை—

பகுதி–6

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

69. திரு. மு.க. ஸ்டாலின்

70. திரு. துரைமுருகன்

71. திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்

72. திரு. ப. ஆடலரசன்

73. திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்

74. திருமதி பி. கீதா ஜீவன்

75. திருமதி பெ. சீத்தாபதி

76. டாக்டர் (திருமதி) பூங்கோதை

77. திருமதி ம. வரலட்சுமி

78. திரு. நா. கார்த்திக்

79. திரு. க. கார்த்திகேயன்

80. திரு. ப. கார்த்திகேயன்

81. திரு. மு.பெ. கிரி

82. திரு. எஸ். சுரேஷ் ராஜன்

83. திரு. டி. செங்குட்டுவன்

84. திரு. ஐ.பி. செந்தில்குமார்

85. திரு. கு.க. செல்வம்

86. திரு. சு. புகழேந்தி

87. திரு. கே.ஆர். பெரியகருப்பன்

88. திரு. இ. பெரியசாமி

89. திரு. பெரியண்ணன் அரசு

2017 மார்ச் 23] [பேரவைத் துணைத் தலைவர்]

90. திரு. எ. ராமர்

91. திரு. டி.ஆர்.பி. ராஜா

92. திரு. வி.ஜி. ராஜேந்திரன்

93. திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்

94. திரு. வாகை சந்திரசேகர்

95. திரு. எ.வ. வேலு

96. திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்

97. திரு. செ. ஸ்டாலின் குமார்

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

தீர்மானத்திற்கு நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

"மாண்புமிகு திரு. ப. தனபால் அவர்களைப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று இப்பேரவை தீர்மானிக்கிறது" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, வாக்குகள் பின்வருமாறு எண்ணிக் கணிக்கப்பட்டன:

தீர்மானத்தை ஆதரித்தோர்– 97

தீர்மானத்தை எதிர்த்தோர் – 122
(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

நடுநிலை வகித்தோர் – எவருமில்லை

தீர்மானத்தை எதிர்த்தோர் அதிகமாக இருப்பதால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் முன்மொழியப்பட்டு, திரு. துரைமுருகன் அவர்களால் வழிமொழியப்பட்ட தீர்மானம் தோல்வியுற்றது என அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்

[பேரவைத் துணைத் தலைவர்] [2017 மார்ச் 23 பிற்பகல் 12–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் என்ற முறையில் என் கருத்துகளையும் இணைத்துக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டராகப் பணியாற்றி, பல்வேறு பதவிகளை வகித்தவர். மிகுந்த மூத்தவர். பேரவைத் தலைவர் பதவிக்கு வந்த பின்னர் கட்சிப் பணிகளிலிருந்து தன்னை முழுவதுமாக விடுவித்துக்கொண்டவர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் பணி என்பது மலர்ப் பாதையின்மேல் நடக்கின்ற பணி அல்ல. முட்கள் நிறைந்த பாதையில் பயணிக்கின்ற பணி. துக்கங்களையும், துயரங்களையும் தான் தாங்கிக்கொண்டு மலர்ந்த மகிழ்ச்சியான முகத்தோடு இந்த அவையை சிறப்பாக நடத்திச் செல்கின்ற தன்மை படைத்தவர் நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

கண்ணியமிக்க இந்தப் பேரவையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் காலத்தில் மூன்று முறையும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் காலத்தில் மூன்று முறையும் ஆக ஆறு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு அற்புதமான அனுபவம் பெற்றவர். (மேசையைத் தட்டும் ஒலி) கண்ணியமிக்க இந்தப் பேரவையில் ஜனநாயக நெறிப்படி, விதிப்படி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைத்து விவாதங்களிலும் பங்கேற்று உரையாற்ற பெருமளவு வாய்ப்புகளும், அதிக நேரமும் வழங்கப்பட்டுள்ளது. ஆளும்கட்சி உறுப்பினர்களுக்குத் தரப்பட வேண்டிய வாய்ப்புகளைக்கூட பெருமளவுக்குக் குறைத்துக்கொண்டு எதிர்க்கட்சிகளுக்கு அதிகமான வாய்ப்புகளை அளிக்கும் வகையில்தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் செயல்பட்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆளும்கட்சி உறுப்பினர்கள் அதிகமாக இருக்கும்போது, பாராளுமன்ற நெறிமுறைகளின்படி, விகிதாச்சார முறைப்படி எங்களுக்கு வாய்ப்புகள் அதிகம் தரப்பட வேண்டுமென்று நாங்கள் கோரிக்கை வைத்தாலும்கூட, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கே பேச அதிகமான வாய்ப்புகளும், அதிக நேரமும் ஒதுக்கப்பட்டது. இது, அவருக்கு ஜனநாயகத்தின்மீது உள்ள அதிக ஈடுபாட்டினைக் காட்டுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) 'ஜனநாயக நாட்டில் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்பவை ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்' என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். தமிழக

[*2017 மார்ச் 23*] [பேரவைத் துணைத் தலைவர்]

மக்களின் உயிரிலும், உணர்விலும் இரண்டறக் கலந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைக்கேற்ப, தமிழகத்தின் வளர்ச்சியே தம் வாழ்வின் இலட்சியம் என்று வாழ்ந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் எண்ணங்களுக்கு வலுவூட்டுகின்ற வகையில், தமிழக மக்களின் நலனுக்காக தவ வாழ்வு வாழ்ந்து, தன் வாழ்வை அர்ப்பணித்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் கனவை நனவாக்கிட, (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து பாடுபடும், வரலாற்றுச் சிறப்புகளையும், பாரம்பரிய பெருமைகளையும் தன்னகத்தே கொண்ட தனிச் சிறப்புமிக்க இந்தப் பேரவை, ஜனநாயக நெறிமுறைகளைப் பாதுகாத்து இந்திய திருநாட்டுக்கே ஒரு முன்னோடிப் பேரவையாகத் திகழ நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பணியாற்ற வருமாறு அன்போடு கேட்டு, அமர்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான தளபதி அவர்கள், . . . (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

பிற்பகல் 12–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *3–6–2016* அன்று நான் பேரவைத் தலைவராக மீண்டும் பொறுப்பேற்றபோது, என்னை வாழ்த்திப் பேசிய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், "எல்லோரும் உணர்ச்சிவசப்பட்டாலும், கட்சி மாச்சரியங்களைப் புறந்தள்ளி, அனைவரையும் ஒருசேர நினைத்து நடுவராக இருந்து தீர்ப்பளிக்கும் பணியினை தாங்கள் நடுநிலையோடு ஆற்றுவீர்கள் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை" எனக் குறிப்பிட்டதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) மாறாக ஒரு துளியேனும் விலகிச் செயல்படக் கூடாது என்பதைச் சிந்தையில் நிறுத்திச் செயல்படுபவன் நான். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு என்னை பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்ற

[பேரவைத் தலைவர்] [2017 மார்ச் 23

தீர்மானம் தோல்வியுற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு பேரவைத் தலைவர் பதவியில் இருக்கும் எனக்கு யார் மீதும் தனிப்பட்ட முறையில் விருப்பு, வெறுப்பு கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவை இயற்றிக் கொடுத்த விதிகளின்படி, மரபின்படியே நான் செயல்பட்டு வருகிறேன் என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு ஆதரவு அளித்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் உட்பட அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, எனக்கு எதிராக வாக்களித்தாலும், அவர்களுடைய கருத்துகளையும் நான் ஏற்று, நிச்சயமாக இந்த அவையை நடுநிலையோடு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எனக்கு வழங்கிய அறிவுரைப்படி, தொடர்ந்து நடத்துவேன் என்பதை உங்களுக்கு நான் என்னுடைய உறுதிமொழியாகத் தெரிவித்து, அடுத்த அலுவல்களுக்குச் செல்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின்மீது எங்களுடைய தலைவர் இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டு வந்தது, ஏதோ நாங்கள் இதில் வெற்றி பெறுவோம் என்பதல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை.

திரு. துரைமுருகன்: காரணம், எங்கள் எண்ணிக்கை எங்களுக்குத் தெரியும். (குறுக்கீடுகள்) ஆனால், எதற்காகக் கொண்டு வந்தோம் என்று சொன்னால், தங்களைப்பற்றி தங்களுடைய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் பாராட்டியதையெல்லாம் இப்பொழுது தாங்கள் படித்தீர்கள். நான் அதைக் குறை சொல்லவில்லை; பாராட்டியிருக்கிறார்கள். அவர் உங்களுடைய கட்சித் தலைவர். அதனால் உங்களைப் பாராட்டியிருக்கிறார்கள். எங்களுடைய ஆசையெல்லாம். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள், இருங்கள். வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள்.

2017 மார்ச் 23]

திரு. துரைமுருகன்: *தாங்கள் இந்தச் சபையை நடத்தி, இந்தச் சபையின் term முடிகிறபொழுது, எப்படி முன்னாள் முதலமைச்சர் உங்களைப் பாராட்டினாரோ, அப்படி நீதி தவறாமல், எங்களுக்கு நியாயம் வழங்கி, நாங்கள் பாராட்டுகிற அளவிற்கு நீங்கள் நடந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து உங்களுக்கு * வேண்டுகோள் விடுக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)*

3. கவன ஈர்ப்பு

(அ) கொளத்தூர் தொகுதி, மின் விபத்தில் உயிரிழந்த திருமதி A. சந்திரா குடும்பத்திற்கு நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்) அது முடிந்துபோய்விட்டது. அதை விட்டுவிடுங்கள். அது வேண்டாம், வேண்டாம், முடிந்துபோய்விட்டது. விட்டுவிடுங்கள். மாண்புமிகு அமைச்சர் அதை வற்புறுத்த வேண்டாம்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொளத்தூர் தொகுதியைச் (குறுக்கீடுகள்) சார்ந்த திருமதி A. சந்திரா 13-3-2017 அன்று மின் விபத்தில் உயிரிழந்தது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு)*

---

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசும்பொழுது ** என்று ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். அதை வாபஸ் வாங்கினால் நன்றாக இருக்கும். (குறுக்கீடுகள்) ** என்றே சொல்லிவிட்டீர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வார்த்தையை 'வேண்டுகோள் விடுக்கிறோம்' என்று மாற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'வேண்டுகோள் விடுக்கிறோம்' என்று மாற்றப்படுகிறது. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் என்னவென்று சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேச எழுந்தவுடன் எனக்கு வரவேற்பு தந்த எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசுகிறபொழுது முன்னர் குறிப்பிட்ட அந்த வார்த்தைகளில் ** என்று அவர் பேசியதை நீங்கள் நீக்கினீர்கள். அதை இப்பொழுது அவையில் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டிருக்கிறார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, உட்காருங்கள். ஏற்கெனவே நான் அவையில் நீக்கிய வார்த்தைகள் இருந்தால் இப்பொழுதும் அவைக் குறிப்பில் ஏறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) விடுங்கள். அதோடு விட்டுவிடுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.